செய்தி வெளியீடு எண்: 560 நாள் : 05.11.2014

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வு கூட்டம், 05.11.2014 இன்று சென்னை, கிண்டி சேமிப்பு கிடங்கு நிறுவன தலைமை அலுவலகத்தில், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கிடங்குகள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமித்து வைத்து, பொது மக்களுக்கு உரிய தரத்துடன் விநியோகம் செய்திடும் வகையில் 2011 முதல் 2014 வரை 61 ஆயிரம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 14 கிடங்குகள் 26 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், நாகப்பட்டினம், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் தலா 3,400 மெ.டன் கொள்ளளவில் கிடங்குகள் கட்டுவதற்கு ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுதவிர, நன்னிலம், வலங்கைமான், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் தலா 3,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், சேலம், தர்மபுரி, கரூர், இராமநாதபுரம், கடலூர், திருநெல்வேலி, தேனி, இராணிப்பேட்டை, முசிறி ஆகிய இடங்களில் 1 இலட்சத்து 25 ஆயிரம் மெ.டன் கொள்ளளவு கொண்ட 25 சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் கொள்ளளவு 6 இலட்சத்து 33 ஆயிரம் மெ.டன்னிலிருந்து 8 இலட்சத்து 36 ஆயிரம் மெ.டன்னாக உயரும் என்று தெரிவித்த மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள், அனைத்து கட்டுமானப் பணிகளையும் விரைந்து முடித்து கிடங்குகளை பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள கிடங்குகளின் பராமரிப்புப் பணிகளை (Maintenance) தொய்வின்றி மேற்கொள்ள வேண்டுமெனவும் அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

இந்நிறுவன கிடங்குகளில், விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருள்களை சேமிப்பில் வைத்து, கிடங்கு சேமிப்பு இரசீது மூலம் (Ware house Receipts) வங்கிகளிலிருந்து 70% லிருந்து 75% கடன் வசதி பெற முடியும். 2011 முதல் 2014 வரையிலான மூன்று வருட காலத்தில் 7 ஆயிரத்து 583 பயனாளிகள் 468 கோடி ரூபாய் கடன் வசதி பெற்றுள்ளனர். இந்தியாவிலேயே விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு உரிய சேமிப்பு இரசீது மூலம் அதிக சேவையினை சிறப்பாக நடைமுறைப்படுத்தியமைக்காக, புதுடில்லியில் தேசிய சேமிப்பு கிடங்குகள் அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய முதல் மூன்று பரிசுகளும், இரண்டு சிறப்பு பரிசுகளும் ஆக அனைத்து பரிசுகளையும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்திற்கே வழங்கப்பட்டது.

விவசாயிகள் கொண்டுவரும் தானிய விதைப் பொருள்களை பாதுகாப்பாக சேமிப்பில் வைப்பதற்குத் தேவையான பயிற்சியை விவசாயிகளுக்கு அளிக்க 50 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும், உணவு தானியங்களின் தரம் மற்றும் நவீன முறையில் பாதுகாக்க தேவையான பரிசோதனை முறைகளை அறிய, பரிசோதனைக் கூடங்கள் (Testing Laboratories) 7 இடங்களில் தலா 1 கோடி ரூபாய் வீதம் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்க ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவித்த அமைச்சர் அவர்கள் இந்நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டுமென அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் வசதிகளை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு பாடநூல் கழகம், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், கூட்டுறவு துணி நூல் நிறுவனங்கள், பொதுத்துறை உர நிறுவனங்கள், இந்திய உணவுக் கழகம், சிமெண்ட் தயாரிப்பு நிறுவனங்கள், இயற்கை எரிவாயு ஆணையம், தமிழ்நாடு காகித உற்பத்தி கழகம், டாஸ்மாக், இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம், விவசாயிகள் மற்றும் பல்வேறு உற்பத்தியாளர்கள் ஆகியோர் தங்கள் தேவைகளுக்கு அதிக அளவில் இந்நிறுவனத்தையே பயன்படுத்திக் கொள்கின்றன.

மேலும், தேர்தல் ஆணையம் தங்களது வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் ஆகியவற்றை பாதுகாப்பாக வைப்பதற்கும், மாவட்டங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி, ஆகியவற்றை இருப்பு வைப்பதற்கும், சேமிப்பு நிறுவன கிடங்குகள் அதிக அளவில் பயன்படுகின்றன. அரசு நிறுவனங்களுக்கு 5% முதல் 25% வரையிலும், விவசாயிகள் மற்றும் விலையில்லா அரிசி உள்ளிட்ட பொருள்களின் சேமிப்பு கட்டணத்தில் 30% வரையிலும் தள்ளுபடி அளிக்கப்படுகிறது என்கின்ற தகவலையும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசு உணவுத்துறை முதன்மை செயலாளர் திருமதி.எம்.பி.நிர்மலா,இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிர்வாக இயக்குனர் திரு.கே.நாகராஜன்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**